புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. உ விரோதிஹு(1889) ஆவணி௴ உ௨வ ஆரம்பமானது.

பத்திரக கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம் ரூ 5-00.
இலங்கை, இந்தியா „ 8-00.
தொலைவாய்ப்பகுதி „ ரூபா 9-00.
தனிப்பிரதி சதம் 5.
☞ முற்பணம் அனுப்புவோர்க்கே பத்திரிகை அனுப்பப்படும்.

# இந்துசாதனம்

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"வனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

"சேர்பூத்த கருவிஞ ளுணர்ச்சி தேக்கச் செவ்பூத்த நிகமாக மங்க னோக்கப், பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்,
பேர்பூத்த வொளர்ததத நினிது துங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த, வார்பூத்த வதிவிச்சை தொழிலென் றேருது மதம்பூத்த விநாயகன்றன் வணங்கி வாழ்வாம்."

"வாழ்க வந்தணர் வானவ ராவினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

விளம்பர விகிதம்.
பகர முதலாக்கு, இரண்டிலக்கம் ரூபா 10-00.
„ அரைக்கலம் ரூபா 5-50.
„ கால்கலம் ரூபா 4-00.
தொடர்ச்சியாக வெளிப்படும் விளம்பரங்களுக்கு விசேஷ கழிவு.
☞ விளம்பரங்கள் முற்பணம் பெறுதலின்றிப் பிரசுரிக்கப்படமாட்டா.

புத்தகம்—சரு. } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஹு ஆவணி௴ உ௩வ; (1933 செப்டெம்பர் 7) வியாழக்கிழமை. { இலக்கம்—சஉ.

## உபதேச காண்டம்,

மூன்றுவது
### அசமுகிச் சருக்கம்.

தன் மூத்தோரின் வரலாறு முழுவதையுங் கேட்ட அசமுகி பின்னரும் மாயையை நோக்கி "தாயே, எனது தமயன்மாருடைய பூர்வவரலாற்றைச் சொன்னபிரகாரம் எனது முற்பிறப்பின் வரலாற்றையுஞ் சொல்லவேண்டும்" என்றுகேட்க, மாயவள் சொல்லுகிறுள்:

"மகளே, சமுத்திரத்தின் மத்தியிலுள்ளதாகிய கோமேதகத்தீவிலே விசிட்டன் என்னும் பெயரையுடைய ஒரு பிராமணன் இருந்தான். அவன் சுவேதையென்னுங் கன்னிகையை மணந்து இல்லறம் நடாத்தும்போது சுவேதையானவள் சித்திரரேகையென்னும் ஒரு பெண்மகவைப் பெற்றுள். அந்தச் சித்திரரேகை கட்டொருவண்ணமும் பொழிதொரு மேனியுமாக வளர்ந்து காலகதியில் மங்கைப்பருவமடைந்தாள். அவளொளிலோ அழகில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவள். விசிட்டன் தன்னுடைய மகளாகிய சித்திரரேகையை, புண்டரீகன் என்னும் வைஷ்ணவப் பிராமணனுக்கு மணமுடித்து வைத்தான். புண்டரீகன் விஷ்ணுமூர்த்தியிடத்தில் மிக்க பத்தியுடையவன்; தனது தரித்திர நிலைமையைக் கண்டு திருவுளமிரங்கி விஷ்ணுமூர்த்தி தனக்கு உதவிய ஒரு இரத்தினம் மூலமாக அப்புண்டரீகன் சகல செல்வங்களுங் கைகூடப்பெற்று ஆயிரக்கணக்கான சீடர்களுக்கு உணவுங் கல்வியும் ஊட்டிவந்தான்.

இங்ஙனமாக, சித்திரரேகையென்பாள் கற்புநெறியிலே திறம்பியவளாய், தன் வீட்டிலுள்ள சீடர்களுடன் சோரமாகக் கூடத்தலைப்பட்டாள். அவளுடைய கூட்டுறவை விரும்பி எத்தனையோ சீடர்கள் தம் மனைவிமக்களைக்கைவிட்டனர். பின்னும் எத்தனையோ பேர் அவளால் தம் ஒழுக்கங் கெட்டனர்; பலர் பொருளிழந்தனர்; வேறு பலர் போதம் கல்வி யென்னுமிவை கெடப்பெற்றனர். சீடர்கள் மாத்திரமல்லாமல், அந்த ஊரில் வசிக்கும் விடர் பலர் அவளுக்குச் சோரநாயகராயினர்; கணவனுகிய புண்டரீகனும் அவள் மீதுகொண்ட மோகத்தினுல் அவள் ஒழுகும் படிற்றொழுக்கத்தை அறியாதவனுனுன்.

இப்படியாக, தவத்திலும் கோபத்திலும் சாபத்திலும் மிக்கவராகிய துருவாசமுனிவர் ஒருதினம் தமதுசீடர்களுடன் அந்தப் புண்டரீகன் வீட்டிற்குச் சென்றுர். சென்ற முனிவரைச் சீடர்களுடன் புண்டரீகன் எதிர்கொண்டு வணங்கி "சுவாமீ, தேவரீர் அடியேனுடைய சிறு குடிலுக்கு எழுந்தருளும் பாக்கியத்தை இற்றைநாட் பெறுதற்குச் சிறியேன் முற்பிறப்பிற்செய்த தவம் யாதென அறியேன்; உமது பாதந் தீண்டப்பெற்றமையால் என் இல்லந் தூய்மையடைந்தது" என்று பல உபசார வார்த்தைகளைச்சொல்லி அழைத்துச்சென்று ஆசனமுதவி அபரச்செய்து அதிதிபூசை முடித்து, தன் மனையாளை நோக்கி, "இம்முனிபுங்கவரும் சீடர்களும் திருவமுது செய்தற்கு சித்தஞ்செய்குதி" எனலும், அவளும் அப்படியே சமையல்செய்யச்சென்றுள். சமையல்முடித்தபின் சித்திரரேகை தன் நாயகனிடம் வந்து தெரிவிக்க, அவன் "முனிவரை அழைத்துச் சென்று திருவமுது அளிக்குதி' என்று அவளுக்குச் சொல்ல, அவள் முனிவரிடம் போனபோது, அவர் உறங்குவார்போல் யோகசாதனஞ் செய்தபடி படுத்திருப்பக் கண்டாள். சித்திரரேகை, விளக்குச்சுடரைக் கனியெனக் கருதி விழும் விட்டிலைப்போல், முனிவர்மேல் மோகங்கொண்டு விகாரவேதனையினுல் அவருடைய தோள்களைத் தழுவினுள்.

இந்திரன் முதலாந் தேவர்களும் அஞ்சுதற்குக் காரணமாயுள்ள கோபத்தோடு கூடிய துருவாச முனிவர் கண்விழித்து நெருப்புப்பொறி சிதற அவளைச் சினந்து பார்த்தார். பார்த்தமாத்திரத்தே அத்தூர்த்தை முனிவருடைய சீற்றத்திற்கு ஆற்றுளாய் அவ்விடம்விட்டு ஓடிச்சென்று நாற்சந்திக்கு அயலே ஆலமரத்தின்கீழ் உள்ளதாகிய ஒரு ஆட்டுப்பட்டியுள் புகுந்து ஒளித்துக்கொண்டாள். சினங்கொண்ட முனிவர் புண்டரீகனை நோக்கி, "ஏ புண்டரீகனே, உன் பெண்டாட்டியைத் தேடிப் பிடித்துவருதி" என்று பணிக்க, அவன் சரீரமும் மனமும் பதற எங்குஞ் சென்று தன் மனையாளைத்தேடிக் காணுய் மீண்டு முனிவரிடம் வந்து "சுவாமீ, என் மனையாளை எங்குந் தேடிக் கண்டிலேன; என் செய்வேன்" என்று இரங்கி நின்றுன். முனிவர் "ஏ சீடனே, அவள் நாற்சந்திக்கயலேநிற்கும் ஆலமரத்தின்கீழுள்ள ஆட்டுப்பட்டியுள் இப்பொழுது காத்திருக்கின்றுள்; நீ ஆங்குச் சென்று உன் தவவலிமையினுல் அந்த ஆலமரத்தின் கொம்பர் நுனியில் அவளை ஏற்றிவிடுகுதி" எனலும், புண்டரீகன் முனிவர் வாக்கைச் சிரமிசை வகித்தவனுய், காலடி பிட்டத்திற்பட ஓடிச்சென்று ஆட்டுமந்தையுட் காத்திருக்குந் தன் மனையாளைத் தபோபலத்தினுல் அந்த ஆலமரத்தின் மேற்கொம்பரின் உச்சியில் ஏறும்படி செய்தான். ஆலமரத்தின் உச்சிக் கொம்பர் காற்றடிக்குந்தோறும் அசைய, தான் தவறி விழுந்துவிடுதல் கூடும் என்ற அச்சத்தினுல், அக்கொம்பரை இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஓலமிட்டாள். அந்தப் பட்டினத்திலுள்ள ஆடவர் மகளிரெல்லாரும் ஆலமரத்தின் கொம்பரிலே தங்கி அலமருஞ் சித்திரரேகையைக் கண்டு "ஐயையோ, இவள் எப்படி இக்கொம்பரை யடைந்தாள்; அத்துருவாசமுனிவருடைய கோபம் பொல்லாதது" என்று ஆச்சரியமும் அச்சமுங் கொண்டவர்களாய்ப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

இவ்வளர்த்தங்களை யெல்லாங் கண்ட புண்டரீகன் தன் மனையாளைப் பிரியவும் வருந்தவிடவும் தான் அவமானப்படவும் பிரியமில்லாதவனுய்த் துருவாசமுனிவர் முன்னிலையில் ஓடிச்சென்று, அடியற்ற மரம்போல அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, 'சுவாமீ, உம்முடைய கோபத்திற்கு ஆளாகி என் மனையாள் ஊரார் பழிக்க ஆலமரத்திலே தொங்கியபடி தியங்குகின்றுள்; அவள் அம்மரத்தைவிட்டுக் கீழே இறக்கும் வண்ணம் நீரே திருவருள்புரிதல் வேண்டும்" என்று இரந்தான். அப்பொழுது முனிவர் அவனைப் பார்த்து "புண்டரீகனே, உன் மனைவியோ இல்லறவொழுக்கத்தினின்றுந் திறம்பிப் பொதுமகளாயினுள்; அவள் உனக்கு உதவாள்; உன்னைப்பற்றிய எண்ணம் அவள் உள்ளத்திலே எள்ளளவுமில்லை; ஆதலால் அவளை அகற்றிவிடுகுதி" என்று கூறினுர்.

"சுவாமி, அவள் பெண்புத்தியினுற் பிழைசெய்துவிட்டனளேனும் தேவரீர் அதனைப் பொறுத்தருளி அவள் அம்மரத்தினின்றும் இறங்குதற்கான ஒரு உபாயம் சொல்லவேண்டும்" என்று புண்டரீகன் பின்னரும் முனிவரைவேண்ட, முனிவர் புன்னகைசெய்து "ஏ சீடனே, அவள் கற்புநெறி தவருதவளாயிருந்தால் நீ இறங்கு என்று சொல்லவே மரத்தினின்றுங் கீழே இறங்குவாள்; இது நிசம்; ஆனதால் நீ ஆங்குச் சென்று அப்படியே சொல்லுதி" என்று கட்டளையிடுதலும் அந்தப் பிராமணன் வேகமாகச்சென்று ஆலமரத்தையடைந்து நின்று அவளைப் பார்த்து 'என் அருமை நாயகியே; ஆலமரத்தைவிட்டுக் கீழே இறங்கக் கடவாய்" என்று உரத்துக் கூறினுன். சித்திரரேகை அவன் சொற்படி நாலு

(தொடர்ச்சி ௫-ம் பக்கம்.)

## என்னைப் பற்றிய கவலை என்?

### அகங்காரப் பேயை அறவே யொழிக்குக.

அடியார் ஒருவர் தம் மனே நிலையைக் கூறுவது.

(ஆரியூர். வ. பதுமநாபபிள்ளை எழுதுவது.)

"கவலை! இக்காலிலே எமது மக்களுக்கிடையே அது நிக்கமறநிறைந்து நிலவுவதை என்னென வியப்புவது? பஞ்சையர்முதற பாராளும் பார்த்திபர்வரை, ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவித கவலைகுடிகொண்டிருக்கிறது. பசித்தபொழுது உணவுஎங்கேகிடைக்குமோ என்பது பிச்சைக்காரர்களின் கவலை. பருவமழையின்மை, பூச்சிபிடித்தல், மாடுமேய்ச்சல், வெள்ளப்பெருக்கு முதலியவற்றால் எவ்வித கட்டமும் நேராது செம்மையாகக் குடித்தனம் நடத்தப் போதிய வருவாய் இவ்வருடப் பயிரிலிருந்து கிடைக்கவேண்டுமே யென்பது விவசாயிகளின் கவலை! நோய்களும் வருவாயிற் குறைவும் ஏற்படாதிருக்கவேண்டுமென்பது சேவர்களின் கவலை! ஜனசமூகத்தில் குழப்பமின்றி அமைதி நிலவவேண்டுமென்பது அரசினரின் கவலை! 'இல்லாதவற்றை நிலையென்றுணரும் புல்லறிவுடையோராய்' உயிர்க்கு உறுதிபயக்கும் உண்மைப் பொருள்களைச் சிந்தனையுஞ் சிந்தியாப்பாராமலே வாழ்நாளை வீணுளாகக் கழித்து வருவோர் தொகை அதிகரித்துவருகின்றதே என்பது மெய்த்தொண்டரின் கவலை! இறைவனது இன்னருளையும் உள்ளத் தூய்மையையும் எய்தவேண்டுமேயென்பது மெய்யன்பர்களின் கவலை! இன்னும் பலருக்குப் பலவகைக் கவலைகள்!

"ஒருகாலத்தில் எனது அகத்தில் பலவித கவலைகளும் குடிகொண்டிருந்தன அதன் பயனுக வாழ்வில் எவ்வித உற்சாகமுமின்றி விசாரசாகரத்தில் ஆழ்ந்தவனுய் உலகவாழ்வையே முற்றிலும் வெறுத்து நின்றேன. என் எதிர்ப்பட்ட எவரிடத்தும் உண்மையன்பைக் கண்டேனில்லை. சாத்திரங்களைத் துருவித்துருவி ஆராயுந்தோறும் புதுப்புதுச் சந்தேகங்களும் குழப்பங்களும் ஏற்பட்டனவேயன்றி உண்மைவிளக்கம் பெற்றேனில்லை. 'உழலும் மனக் குரங்கை உழலவொட்டாமல்தடுத்து ஒருநிலையில் நிறுத்தும், ஆற்றலுற்றேனில்லை. பகைவர்களிடத்தும் பாமரர்களிடத்தும் நேசமையத்தில் அன்பு செலுத்தக் கற்றேனில்லை.

"இக்கிலையிலே 'சாத்திரங்களைக் கடந்து செல்! ஏனெனில் அவை பிரகிருதிவரையிற்றுன்—முக்குணங்கள் வரையிற்றுன்—போகின்றன. நாம் அவற்றைக் கடந்து அப்பாற்சென்றுல் சமரசத்தைப் பார்க்கிறேம். அதற்கு முன்னல்ல!' என்ற சுவாமி விவேகானந்தரின் அருள் மொழியைக் கண்டேன். அம் மணிமொழி எனக்கு அறிவுச்சுடர் கொழுத்தியது. எனவே, சாஸ்திர ஆராய்ச்சியில் பொழுது கழிப்பதைவிட்டு ஆன்ம உய்வுக்கு ஏற்ற உபாயம் எது என்பதைக் குறித்துச் சிந்திக்கலானேன். அதன் பயனுக,

'இறக்கவும் ஆசையில்லை, இப்படி நான்
இருக்கவும் ஆசை இன்று, இனி நான்
பிறக்கவும் ஆசை இல்லை, உலகெல்லாம்
பெரியவர் பெரியவர் எனவே
சிறக்கவும் ஆசைஇல்லை, விசித்திரங்கள்
செய்யவும் ஆசையொன்றில்லை;
அறக்கவும் ஆசைஇல்லை, துயரடைந்து
தூங்கவும் ஆசையொன்றிலையே'

என்று இராமலிங்கப்பெரியார் பாடியவண்ணம் எனக்கு எதிலும் விருப்பமெழவில்லை. நான் கற்றும் கேட்டும் உணர்ந்தவற்றைக் கொண்டும் அனுபவத்திற் கண்டறிந்தவைகளைக் கொண்டும் இவ்வுலக வாழ்வில் எதிர்ப்படும் பல இடையூறுகளையுங்கடந்து உள்ளத்தைத் தூய்மையாக்கிக் கொள்ளக்கூடும் என்று எண்ணி அத்தனிப்பெரும் பேற்றையடையப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டேன். அம் முயற்சியில் அயர்ச்சியின்றி மேன்மேலும் உற்சாகத்துடன் நடந்துவந்தால் வெற்றி பெற்றுவிடலாம் என்னுந் துணிவு எனக்கிருந்துவந்தது. 'சிந்தையை அடக்கியே சுமாயிருக்கின்ற திறம் அரிது' என்ற தாயுமானவரின் மணிமொழியின் உண்மையை உணர்ந்தேனில்லை' எனது முயற்சியால், யான் கற்ற படிப்பினைகளினுல், எனது அறிவால், ஆற்றலால், மனத்தை அடக்கிவிடலாக்கூடும் என்னுந் துணிவு இருந்தும் நான் எத்தகைய வெற்றியும் எய்தினேனில்லை.

"ஒருவன் முதலிலே மனத்தை வடிவங்களிலே செலுத்தி ஏகாக்கிர சக்தியைச் சம்பாதிக்க வேண்டும். வடிவங்களிலே அவன் மனதை நிலைநிறுத்தப் பழகிவிட்டால், பின்னர் சுருப வஸ்துவிடத்திலே நிறுத்தலாம். 'ராம' 'ராம' என்று நாமத்தை உயரத்தூக்கிக் கொண்டு கண்ணுஞ் சுருத்தும் கலந்திய பித்தனைப் போல் களிக்கூத்தாடுவது சுரோபத்தியாகும் இக்கலியுகத்துக்குச் சுரோபத்தி தருக்கதென்பது மட்டுமன்று; அது அதிசீக்கிரத்தில் பலனையுமளிக்கின்றது. ஈஸ்வரனுடைய கோட்டை நிமலேன எதிர்க்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அது பிடிபடும். ஈஸ்வரனிடத்திலே சரணுகதி அடைந்துவிடு, கூச்சம் பயம் முதலிய மூட உணர்ச்சிகளையெல்லாம் உதறிவிடு. "நான் ஈஸ்வரநாமத்தைச் சொல்லிக்கொண்டு கீர்த்தனஞ்செய்தால், பிறர் என்ன சொல்லுவார்களோ! என்பது முதலாம் எண்ணங்கள் எல்லாவற்றையும் எறிந்துவிடு' எனும் ஸ்ரீ இராமக்கிருஷ்ணரது அருள் மொழிகளைப் பன்முறையுஞ் சிந்தித்துச் சிந்தித்துக் கிடந்ததன்பயனுக எனக்குப் புத்துணர்ச்சி உண்டாயது. எனது பெரும் பேதமை எனக்கு நன்கு புலனுயது. இறைவனது இன்னருள பெற்றுலன்றி வேறு எவ்விதத்தாலும் ஆன்ம உய்வை எதிர்பார்த்து நிற்பது வீணே எனும் உண்மை எனக்கு நன்கு விளங்கியது'

"எனவே எண்ணிறந்த ஆண்டுகளாய் எண்ணிறந்த அன்பர்களால் ஏத்திப் போற்றப்பட்டு எல்லையில்லாப் பெருமை பெற்று விளங்கும் திருவரங்கம் பெரிய கோவிலிலே, திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள அரங்கேசர்பால் என் சிந்தை சென்றது. அன்றுதொட்டு இன்றுவரை ஒருநாளேனும் திருவேளையிலும் திரு அரங்கனைத் துதித்து மகிழ்வதை மறந்தேனில்லை. என்னை ஒரு கருவியாக மட்டுமே கொண்டு இறைவன் ஆட்டிவைத்து வருகின்றுன் என்பதை உணர்ந்தேன. "நான் முயல்கின்றேன்; நான் செல்கின்றேன்; நான் வெற்றி பெறுவேன்' எனும் அகங்காரத்தை எனது அகத்தினின்றும் அறவே அகற்றினேன். 'கர்மங்களைச் செய்ய நீ கடமைப் பட்டவனேயன்றி, அவற்றின் பலனை எதிர்பார்த்து நிற்க நீ உரியவன் அன்று' எனும் விவேகானந்தரின் அருள் மொழி அகத்திற் பதிந்தது. (வரும்.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகஞு
ஆவணிமீ உ௯௨ வியாழக்கிழமை.

## விடிந்துந் தடுமாற்றமா?

2

அரசாங்கசபை நிபந்தனைகளை யேனும் தேசாதிபதி சமையந்தோறுங் காட்டும் யதேச்சாதிகாரத்தையேனும், அரசாங்கசபையுட் புகுந்த சனப்பிரதிநிதிகள் சென்ற இரண்டு வருடகாலத்தில் இல்லையேல் இற்றைவரையில் ஏதுஞ் சீர் திருத்திய துண்டா? சிங்களப் பிரதிநிதிகள் அரசாங்கசபையுட் போய்ப் புகுந்துவிட முற்பட்டு நின்றகாலத்தில், சனங்களுக்குச் சொல்லிய, எடுத்துங் காட்டிய நியாயமென்னவென்றால், தாங்கள் இந்த அரசாங்க சபையைப் பகிஷ்காரஞ் செய்யாது, அதனுட் புகுந்து நின்றுகொண்டு அதனைத்திருத்துவதென்பதல்லவா? அப்படிச் சென்றவர்கள் அதனுட் புகுந்துகொண்டு ஒப்பாரி சொல்லுகிறார்களே யல்லாமல், டொனமூர்சங்கப் புதிய நிபந்தனைகளையேனும் நமது தேசாதிபதியையேனும் ஏதுந் திருத்தக் காணேமே. சென்றவாரங் கூடிய அரசாங்கசபைக் கூட்டத்திற் சனப்பிரதிநிதியாகிய மிஸ்ரர் G. C. S. கோறியா தேசாதிபதியைக் கண்டிக்குமிடத்து மந்திரிமாரின் அபிப்பிராயத்திற்கு மாறுக, தேசாதிபதி கருமஞ்செய்வது முழுதும் அடாதகாரியமென்றும் முறைபற்றதென்றுஞ் சொல்லவில்லையா? வேறொரு சந்தர்ப்பத்தில் மிஸ்ரர் கோறியா தேசாதிபதி செய்யும் அக்கிரமம் சகிக்க, முடியாததென்கிறார்! மிஸ்ரர் விக்கிரமசிங்கி யெனப்படும் இன்னொருசனப்பிரதிநிதிதேசாதிபதியைப்பற்றிச் சொல்லுமிடத்து, தாங்கள் "கிறுமபோன்" எனப்படும் பாட்டுப்பெட்டித் தட்டுகள்போல விருப்பதாகவும், தேசாதிபதியே பாட்டுச் சொல்லுபவராகவும், அவர் சொல்லும் பாட்டை, பெட்டியில் மாட்டியவுடனே தட்டுகள் பாடுவதுபோல் தாங்கள் பாடுவதாகவும் சொல்லுகிறார்.

விவசாயப்பகுதி மந்திரியாராகிய மிஸ்ரர் சேனநாயக தேசாதிபதிசெயலைக் கண்டித்துப் பேசுமிடத்து, "எங்களை, தம்முடையகையில் வைத்திருக்கும் பொம்மைகளென்று தேசாதிபதி எண்ணியிருக்கிறார்போலும்" என்று சீறுகிறார். இப்படியே சிங்களப்பிரதிநிதிகளும் மந்திரிமாரும் தேசாதிபதியை வரையின்றிக் கூட்டந்தோறும் கண்டித்து, தங்கள் பரிதாபநிலையையிட்டுப் பச்சாத்தாபப்பட, இந்த யாழ்ப்பாணத்திலேயுள்ள சிலரினுஞ் சிலர் இன்னமும் அரசாங்கசபையுட் புகத்தான் வேண்டுமென்று கரவாக முயற்சிசெய்தல் யாதுபற்றியோ அறிகிலேம்! தேசத்துரோகஞ் செய்து, சாதித்துரோகஞ் செய்து, சகோதரத் துரோகஞ் செய்து, அரசாங்கசபையுட் பிரவேசிக்க வேண்டுமென முயற்சி செய்யும் இங்குள்ள சிலரினுஞ் சிலருள் 4 பேர் போய் அரசாங்கசபையுட்புகுந்து அரசாங்கசபை நிபந்தனைகளையும் தேசாதிபதியையுந் திருத்திவிடுவார்களா? தம்நயங்கருதி அரசாங்க சபையுட் பிரவேசிக்க ஆசைகொண்டு உழலும் இந்தச் சிலரினுஞ் சிலருள் 4 பேர் பின்புறக் கதவாலேனும் சட்டசபையுள் ஒருவாறு போய்ப் புகுந்துவிட்டால், வீடுகொளுத்தும் இராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கும் மந்திரிபோலல்லவா மாறிக்கொள்ளுவார்கள். இந்நால்வரும் தமக்கு அநுகூலமான கருமங்களைச் செய்துகொண்டு ஊருக்கு முழுப் பிரதிகூலமான தீமைகளையல்லவா செய்வார்கள். இவர்கள் அங்கேபோய்ப் புகுந்துவிட்டால், சிங்களப் பிரதிநிதிகள் இப்பொழுது தேசத்திற்குச் செய்யும் அற்ப தொண்டைத்தானும் செய்யவிடாமல் இவர்கள் தேசாதிபதிக்குத் துணையாகநின்று சிங்களப் பிரதிநிதிகளையும் பழுதாக்கி விடுவார்களே. இவர்களிடத்திற் பிரதிநிதித்துவத்தை இங்குள்ளார் ஒப்பிப்பது குரங்கின் கையிலே நெருப்புக்கொள்ளியைக் கொடுத்துவிடல் போலல்லவா வந்து முடியும்.

இனி, வடமாகாணப் பகுதியிற் சில வைத்தியசாலைகளையும் மருந்துச்சாலைகளையும் அரசினர் தவிர்த்துவிட நிச்சயித்திருத்தல், பணமுட்டு காரணமாகவேயன்றி, யாழ்ப்பாணத்தார் அரசாங்கசபையைப் பகிஷ்காரஞ் செய்தனரென்ற காரணம்பற்றியன்று. இலங்கையின் ஏனைய பாகங்களிலும் அரசினர் பணமுட்டு காரணமாக இப்படியான செயல்களைச் செய்துவருகின்றார்கள். நாய்க்கு எங்கே அடித்தாலும் அது தன் காலினையே தூக்குதல்போல அரசினர் பணமுட்டு காரணமாக எவ்வகையான சிக்கனவைச் செய்யினும், அரசாங்கசபையுட் புக ஆசைகொண்ட இந்தச் சிலரினுஞ் சிலர் அரசினர் செய்வதெல்லாவற்றுக்கும் பகிஷ்காரத்தையே காரணமாகக் காட்டுகின்றார்கள். மேலும் இங்குள்ள சில வைத்தியசாலைகளையும் மருந்துச்சாலைகளையும் அரசினர் தவிர்த்தலால் யாழ்ப்பாணத்தவர்க்கு வரக்கூடிய குறை யாதுமில்லையெனலாம். யாழ்ப்பாணத்தவர்கள் ஆங்கில மருந்தை அபிமானித்தல் மிக அரிதாகும். தமிழ் வைத்திய முறையையே பெரிதுங் கைக்கொள்ளுகிறார்கள். ஆங்கில வைத்தியத்தைக் கைக்கொள்ளுஞ் சிலரும், இங்கே அரசினர் வைத்தியசாலைகள் பல விருக்கவும் அவற்றை விடுத்து இணுவிலிலும் மானிப்பாயிலுமுள்ள அமெரிக்க மிஷன் வைத்தியசாலைகளையே விரும்பி அபிமானிக்கின்றார்கள். ஆனதால் இரண்டொரு அரசாங்க வைத்தியசாலையும் மருந்துச்சாலையும் இல்லாமற்போவதால் இங்குள்ளார்க்கு வருங்கேடு யாதுமில்லையாம்.

அரசாங்க சபையிலே காலத்திற்குக் காலம் நேரும் அக்கிரமங்களையெல்லாம் நன்கு அறிந்துகொண்டும், விளக்கைக் கையில் வைத்துக்கொண்டு கிணற்றுள் விழுவார் போல், இந்தச் சிலர் அரசாங்கசபையுட் புகத்தான் வேண்டுமென்று பேசுவதும் எழுதுவதும் முயற்சிசெய்வதும் தம்நலங்கருதியேயல்லாமல் ஒருபோதும் பொதுநலங்கருதியல்லவென்பது ஆராய்ந்து அறிந்த உண்மை.

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்)

"மகளே, பெற்ற பிதா மாதாக்களாகிய எங்களுக்கு உண்மையைச் சொல்லக் கொஞ்சமேனும் இலச்சைப்படாதே. உனக்கு ஒரு இடைஞ்சல் வந்தால் நாங்கள் பேசாமற் சும்மாவிருக்க முடியுமா? எங்களுக்கு உன்விஷயத்தில் இரத்தத் துடிப்பு இல்லையென்று நினைக்கிறாய்; இப்பொழுது தான் உனக்கு வந்த குறையென்ன; ஒன்றுமில்லை பிள்ளைகளையுங் கூட்டிக்கொண்டு ஆருந் துணையின்றித் தன்னந்தனியே நீ புறப்பட்டு இங்கே வரத்தக்கதாக அந்த ஆள் செய்த குறையென்ன; ஒன்றையும் ஒளியாமற் சொல்லு" என்று தகப்பன் கேட்க, மகள் கண்களில் நீர் ததும்ப, பின்வருமாறு சொல்லுகிறாள்:

* * *

"ஐயா, எங்கள் விவாகம் நடந்து இரண்டு மூன்று வருடகாலமாக அவரும் நானும் பாலும் நீரும்போலவும் பூவும் மணமும் போலவும் எவ்வகையான வித்தியாசமுமின்றி அன்பாக வாழ்ந்துவந்தோம். அவர் என்னிடத்தில் எவ்வளவோ அன்புபாராட்டி வந்தார்; எனக்கு என்ன வேண்டுமென்றாலும் உடனே தேடிக் கொண்டுவந்து தருவார்; நான் ஏதும் வீட்டுவேலைசெய்வதென்றாலும் அவருக்கு அது பிடிக்காது; என்னைக் குனிந்து துரும்பெடுக்கத்தானும் விடமாட்டார்; எதனையும் வேலைக்காரரை வைத்தே செய்வித்துக்கொண்டுவந்தார்; ஆனாற் சமையலொன்றையும் வேலைக்காரரை விடாமல் நானே செய்துவந்தேன். கனவிலும் என்னைச் சினந்து பார்த்தறியார்; எடியென்று சொல்லியறியார்; சம்பளம் எடுத்தால், பொத்தினபடி கொண்டுவந்து அதை என்னிடந் தந்துவிட்டு, பிறகு தன் தேவைக்கு என்னிடம் காசுவாங்கிச் செலவழிப்பார்; கோயிலுக்கோ, கல்யாணவீட்டுக்கோ, கூத்துக்கோ, படக்காட்சிக்கோ, விருந்துக் கூட்டத்துக்கோ, உலாத்துக்கோ, எதற்கோ நான் போக ஆசைப்பட்டால், மோட்டக்கார் வருவித்து அந்தந்த இடங்களுக்கெல்லாம் என்னைக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டிக்கொண்டுதான் வருவார்; என்மீது அவர் வைத்திருக்கும் அன்பைக் கண்டு நானும் அவரிடத்தில் உண்மையான விசுவாசம் வைத்து அவர் குறிப்பறிந்து நடந்துவந்தேன். எங்கள் இருவருடைய ஒற்றுமையைக் கண்டு அயலிலே ஊரிலே எடுத்துப் பேசாதவர் மெச்சாதவர் எவருமில்லையென்று சொல்லலாம். ஐயோ, இப்பொழுதுநினைத்தாலும் என்மனம் பதறுகின்றது. ஒருமுறை மூன்றுநாட் காய்ச்சல் எனக்கு வந்துவிட்டதென்று அந்த மனுஷன் பட்டபாடு கொஞ்சமல்ல; டக்டருக்கென்றும் தமிழ் வைத்தியருக்கென்றும் செலவிட்ட பணங் கொஞ்சமல்ல; அந்த மனுஷன் அந்த மூன்றுநாளும் தான் சாப்பிடக்கூடவில்லை. இப்படியெல்லாம் ஐக்கியமாக இருவரும் இருந்தோம்."

* * *

"ஐயா, இப்படி இருக்குங்காலில் எந்தப் பாவியின் கண்ணூறோ, நாவூறோ, நான் அறியேன், சின்னத்துரையெனறு சொல்லி ஒருவன் இடையிடையே வந்து இவரோடு சிநேகிதமாய்விட்டான். இவர் காலால்இட்ட கருமங்களை அவன் கையிறைற்செய்வான்; எனக்கேனும் பிள்ளைகளுக்கேனும் ஏதும் சுகவீனம் வந்தால் அவன் ஒற்றைக்காலில் நின்று கருமம் பார்ப்பான்; இவைகளைக் கண்டு எனக்கும் அவன்மேல் இரக்கம் உண்டானது; ஏதும் பொருள் வாங்கலாமென்று எண்ணித்தானே அவன் எங்கள் விஷயத்தில் இவ்வளவு பாடுபடுகிறான் என்று நான் நினைத்து அவன்மேல் இரக்கங்கொண்டு அவனுக்கு இடையிடையே ஏதும் பொருளுதவிசெய்யும்படி நான் அவருக்குப் பலமுறை சொன்னதுமுண்டு. சில சமையங்களில் அவர் இவனை உலாத்துக்குக் கூட்டிக்கொண்டுபோவதுமுண்டு; இருவரும் இப்படி உலாத்திற்குப்போய் இரண்டு மூன்று நாள் இரவு 10 மணிக்குமேல் வீட்டிற்கு மீண்டு வந்தார்கள். இப்படியாக ஒருநாள் அவர் நேரஞ்செல்ல வந்து சாப்பிடும்போது ஐயோ, நீங்கள் உலாத்தப்போகிற் போய்விட்டு 8 மணிக்கு முந்தியாகுதல் வரவேண்டாமா, நேரஞ்செல்லவருகிறீர்களே; வேலைக்காரப் பையனோ சிறியவன்; பெரிய ஆட்கள் எவரும் இல்லாமல் தன்னந்தனியே இருக்க எனக்குப் பயமாகவிருக்கின்றது; இனி, வெளிக்கதவையும் நீங்கள் மீண்டு வருமுன் எப்படி நான் பூட்டுவது, அது சரியல்லவே ...என்று இப்படி மெத்தப் பணிவாக அவருக்குச்சொன்னேன்; சொல்லி முடியுமுன் அவர் என்னைச் சினந்து பார்த்தார்; ஒருகாலமும் எடி என்று என்னைச் சொல்லியறியாதவர், அன்றைக்கு என்னடி சொன்னாய்? என்று பல்லெதிறக்க உறுக்கி அதட்டிச் சொன்னார். உண்ட உணவையும் அவ்வளவில் விட்டுவிட்டு உடனே எழும்பி வெளியே போய் வாய்கை கழுவிவிட்டு வந்து தலைவாசலிலிருந்தசார்மனைக்கதிரையிற்சாய்ந்து படுத்துவிட்டார்."

* * *

"எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை; என் சரீரம் நடுங்கியது; மனம் பதறியது; கண்களினின்றும் நீர் தாரைதாரையாகப் பெருகியது; விம்மல் பொருமல் உண்டானது; ஐயோ, நான் என்ன செய்தேன்; என்ன சொன்னேன்; குற்றமாக ஒன்றுஞ் சொல்லவில்லையே; கொஞ்சம் நேரத்தோடு வந்தால் நல்லதென்றுதானே சொன்னேன்; அதனையும், அயலிலுள்ள மற்றைப்பெண்களைப் போல வெடுசுடு என்று சொல்லாமல் இதமாகத்தானே சொன்னேன்; இதற்கு இவர் இப்படியெல்லாம் கோபிக்கின்றாரே, இது என்ன விபரீதம்; ஏதும் உத்தியோக விஷயமாகச் சங்கடம் ஏற்பட்டிருக்க நான் பேய்த்தனமாக, சமையம் அறியாமற் கதைபேசிவிட்டேனோ; அல்லது வேறு ஏதும் சங்கடமோ; வேறு அப்படியான கவலை ஏதும் நான அறியத்தக்கதாயில்லையே; ஒருபோது யாரும் எனக்கு விரோதமாகக் கோளமூட்டி விட்டார்களோ, என்ன செய்தனை; அவர் சாப்பிட்டபிறகு, நான் சொல்ல நினைத்ததைச் சொல்லலாமே; என் பெண் புத்தியாலல்லவோ நான் மோசம் போனேன், என்று இப்படி இருந்த இடையிலேயே என்னென்ன எண்ணமெல்லாம் எண்ணினேன்; அவருக்குக் கிட்டப்போய் அவரைச் சமாதானம் பண்ணலாமோ என்றால் அதற்கும் ரோசம் விடவில்லை; என் தாய் தகப்பன் இன்னமும் என்னை எடியென்று சொல்லியறியார்கள், பள்ளிக்கூடத்திற் படிக்குங் காலத்திலே உபாத்தியாயர் அப்படிச் சொல்லியறியார், உற்றார் அயலார் ஒருபோதும் அப்படிச் சொன்னதில்லை, இவரும் இதற்குமுந்தி ஒருபோதும் எடியென்றதில்லை, இன்றைக்கு நான் ஒருகுற்றமுஞ் செய்யாமலிருக்க இவர் என்னை இப்படிச்சொல்லவோ என்று பேய்த்தனமாய் எண்ணிவிட்டேன்; கோபம் ஆறி என்னைக் கூப்பிடுவாரோ என்று நெடுநேரம் காத்திருந்தேன்; அவர் கூப்பிடவுமில்லை; நான் இருக்கும் பக்கத்தைத் திரும்பிப்பார்க்கவுமில்லை; எனக்கும் ஆத்திரம் அதிகப்பட்டது; நான் எல்லாவற்றையும் அப்படியே விட்டு விட்டு எழும்பிப் போய் என படுக்கையில் அழுதுகொண்டு முகங்குப்புறப் படுத்துவிட்டேன்; நான் படுத்துச் சிறிது நேரஞ்செல்ல 11 மணி அடித்தது. நான் பட்டினி கிடக்க ஒரு நிமிஷமும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டாதவர், உடனே வந்து என்னைச் சமாதானம் பண்ணிச் சாப்பிடச் செய்பவர் இன்றைக்கும் அப்படிச் செய்வார்தானே என்ற எண்ணத்தினுல் 12 மணி வரையிலும் அழுதபடியே படுத்துக் கிடந்தேன். அவ்வளவு நேரஞ்சென்றும் அவர் என்னை ஏனென்றுங் கேட்கவில்லை. எனக்கோ கவலை ஆத்திரம் பசி எல்லாம் அதிகப்பட்டமையினுல் நித்திரையும் வரவில்லை; படுத்திருக்கவும் முடியவில்லை; சரி பெண்ணாய்ப் பிறந்தால் ஆண்பிள்ளையோடு எதிர் பாராட்டக்கூடாது; ஒருகை அடிக்கும், ஒருகை அணைக்கும்; நீர் அடித்து நீர் விலகுவதா, .... என்று பலவாறு யோசித்து, நான் வெற்றிலைபாக்கு எல்லாம் ஆயத்தப்படுத்தி வெற்றிலைத் தட்டத்தையும் எடுத்துக்கொண்டு அவர் கிட்டப் போக, கண் விழித்திருந்தவர் நான் கிட்டப்போவதைக் கண்டு கண்களைமூடிக் கொண்டு உறங்கினவர்போற் கிடந்தார். நான் அதைக் காணாதவன்போல் மெல்லத் தட்டி எழுப்பி வெற்றிலை போடுங்களேன் என்று தாம்பூலச் சுருளை நீட்டினேன். எனக்கு வேண்டாம் கொண்டுபோடி என்று புறங்கையினுல் எற்றிய எற்றில் வெற்றிலைச் சுருள் எங்கே போய் விழுந்ததென்று அறியேன்; எனக்கோ பொல்லாத மனவருத்தம் ஏற்பட்டது...." என்று இப்படி மகள் சொல்லிக்கொண்டிருக்கும் போது, தகப்பனை யாரோ வெளியே நின்று கூப்பிட வேலாயுதம்பிள்ளை மனைவியையும் மகளையும் உள்ளே போகும்படி சொன்னார்.

(வரும்.)

## யாழ்ப்பாணம் சரஸ்வதி விலாச சபை.

### நீதியரசரின் பாராட்டு.

யாழ்ப்பாணம் சரஸ்வதி விலாச சபையார் சென்ற சனிக்கிழமை இரவு 8½ மணி தொடக்கமாக வண்ணார்பண்ணை றோயல்நாடக மண்டபத்தில், பதி பசு பாச பந்தங்களையே நாடகபாத்திரங்களாகக்கொண்ட "நமசிவாயம்" அல்லது "நான் யார்" என்னும் சரித்திரத்தை நடித்துங் காட்டினர். நீதியரசர் M. T. அக்பார் அவர்களும் அவர் பரிவாரமும் சமுகமளித்தனர். யாழ்ப்பாணம் டிஸ்திரிக் நீதிபதி மிஸ்ரர் சைமன் ரொட்றிகோ, வடமாகாணப் பொலிஸ் தலைவர் மிஸ்ரர் R J வீரசிங்க முதலாம் பிரமுகர்களும் சமுகமளித்துச் சிறப்பித்தனர்.

நீதியரசர்க்கும் பரிவாரர்க்கும் மாலை யிடப்பட்டபின்னர், சபையின் உபதலைவர்களுள் ஒருவராகிய நியாயவாதி ஸ்ரீ க. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் நீதியரசருக்கு நல்வரவு கூறினர். செ- ன் ராவ்பகதூர் ப. சம்பந்தமுதலியாரால் நிறுவப்பெற்ற சுகுணவிலாசசபையைப் பின்பற்றி 1912-ம் ஆண்டு சரஸ்வதி விலாச சபை நிறுவப்பெற்று, அன்றுதொட்டின்றுவரை அது ஆற்றிய தொண்டுகளையும் உபதலைவர் சுருங்கக்கூறி விளங்கவைத்து, நீதியரசர் சமுகமளித்துச் சபையை அபிமானித்ததன் பொருட்டுச் சபையார் சார்பாக நன்றி கூறினர்.

இரவு 11-30 மணியளவில் நீதியரசர் எழுந்து, இந் நாடகத்தை இயற்றியவரும், சபை நாடகாசிரியருள் ஒருவருமாகிய வித்துவான் க. இராமலிங்கம் அவர்களைப் பாராட்டி, அவர் இன்னும் இத்தகைய நன்முயற்சிகளில் ஈடுபடுதற்காக எல்லோரும் அவருக்கு ஊக்கமளித்தல் இன்றியமையாதது எனப் புகன்றனர். காமக்குரோதம் லோபம் மதமாற்சரியம் எனப்படும் மிருகங்களுடன் வளரும் ஆன்மாவானது சற்புத்திரின் துணையினுல, சற்குருவை யடைந்து சதாசிவத் தியானத்தில் இருந்து அறிவைச் சம்பாதித்து, அதன் மூலமாக ஞானத்தைப்பெற்றுப் பின் தனது உண்மை நிலைமையை அறிவதை விளக்கும் "நமசிவாயம்" அல்லது "நான் யார்" என்னும் இந்நாடகம் மக்களிடையே ஆன்மார்த்தபோதனைகளைப் பரப்ப விரும்பும் எல்லோரும் நடித்து இன்புறல் வேண்டுமெனவும், இம்மேலான நாடகத்தைச் சரஸ்வதிவிலாசசபையார் எவரும் மெச்சும்படியாய்த் தத்ரூபமாய் நடித்துக் காட்டியது சாலச் சிறந்ததெனவும் வியந்துரைத்தார்.

சபையோர்யாவரும் நீதியரசர் போகும் போது மங்கலவாழ்த்துக் கூறினர்.

இரவு 2 மணியளவில் இந்நாடகம் யாவரும் மெச்சும்படியாக நடிக்கப்பட்டபின்னர் பூர்த்தியாயது.

### சுகாதாரப் பொருட்காட்சி.

1933ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ம் 7ம் தேதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் ஓர் சுகாதாரப் பொருட்காட்சி நடைபெறுமெனவும், வடமாகாணத் தலைவராயுள்ள மிஸ்ரர் E. ரொட்றிகோ அவர்கள் அதனைத் திறந்து வைப்பர் எனவும் வடமாகாணச் சுகாதார உத்தியோகத்தர் தெரிவிக்கிறார்.

# தங்கம் விலையேறியதன் காரணம்.

## தங்க நாணயத் திட்டம் என்றால் என்ன?

[ஜே. எஸ். பொன்னையா, எம். ஏ. பேராசிரியர், அமெரிக்கன் காலேஜ் மதுரை]

ஒரு தேசத்தில் தங்க நாணயத் திட்டமிருப்பதைப் பற்றியும், அது நீங்குவதைப்பற்றியும் அடிக்கடி தினசரிகளிற் படிக்கிறோம். எனினும் பெரும்பாலாருக்கு அது புலப்படாத இரகசியங்களில் ஒன்று என்பது மிகையாகாது. பொருளாதார சாஸ்திரத்தை நன்கு கற்றுணர்ந்தவர்களையும் சிற்சில சமயங்களில் திகைக்கச் செய்து விடுகின்றன, நாணயத் திட்டத்திலேற்படும் பின்னல்கள் அநேகம். ஆயினும் அவற்றின் முக்கிய கருத்துக்கள் எவரும் தெளிவில் அறியற்பாலன.

### தங்க நாணயம்.

முற்காலத்தில் (கிராமாந்தரங்களில் இக்காலத்தும்) ஒருவர் தம்மிடத்திலிருக்கும் ஒரு பொருளைக் கொடுத்துப் பிறரிடத்திலிருந்து தமக்கு வேண்டும் வேறொரு பொருளைப் பெற்றுக்கொள்வது வழக்கம். இம்முறைக்குத்தான் பண்டமாற்று என்று பெயர். இம்முறையிலேற்படும் சிரமங்களை யொழிக்கவே நாணயம் உபயோகிக்கப்படுகிறது. ஏனெனில் நாணயத்தைக் கொடுத்து எப்பொருளையேனும் வாங்கிக் கொள்ளலாம். அது பண்டமாற்றுக் குபயோகமாகும். ஓர் பொதுப்பண்டமாகவும் எல்லாப் பண்டங்களின் விலையையும் அளவிடும் ஓர் சிறந்த மதிப்புக்கருவி ஆகவும் இருந்து வருகிறது.

இந்நாணயம் வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களினுற் செய்யப்பட்டிருக்கின்றன வென்பது யாவரும் அறிந்தவிஷயம். ஏன் இவ்வுலோகங்களை நாம் நாணயமாக மதிக்கிறோமென்பதும் பலர்அறிந்திருப்பர். அவை சிறிய உருவில் நிறைந்த மதிப்பையுடையன, நிலையான மதிப்பை ஏற்று நிற்பன. நாணயங்களாகச் செய்வதற்கும் நன்கமைந்தன, எவராலும் அச்சமின்றி கொள்ளவும் கொடுக்கவும் தக்கன; எனவே எல்லாத் தேசத்தினராலும் வெள்ளியும் பொன்னும், விசேடமாகப் பொன்னும் நாணயமாக உபயோகப்பட்டு வருகின்றன.

வெள்ளிக்காசுகளையே சட்டப்படி செல்லக்கூடிய நாணயமாக உபயோகித்து வருவதை "வெள்ளி நாணயத் திட்டம்" என்பர். இது சீனுவில் இன்றைக்கும் இருந்து வருகிறது. வெள்ளியையேனும் தங்கத்தையேனும் ஏககாலத்தில் நாணயமாக உபயோகித்து வருவதை இரட்டை நாணயத் திட்டம் என்பர். இவ்விரண்டு உலோகங்களினுல் செய்யப்பட்ட காசுகளும் சட்டப்படிசெலாவணியாகிக் கொண்டிருக்கும் ஓர் குறித்த சம்பந்தத்தில் அவற்றை ஒன்றிற்கொன்று அரசினர் மாற்றிக்கொடுப்பர் தற்சமயம் ஒரு தேசத்திலும் இத்திட்டம் இல்லை.

உலகத்தில் முக்கியமான எல்லாத் தேசங்களிலும் தங்கம் ஒன்று மட்டுமே நாணயமாக வழங்கப்படுகிறது. இதைத்தான் தங்க நாணயத் திட்டம் என்று கூறுகிறோம்.

### காகித நாணயம்.

மேலைத் தேசங்களிலெல்லாம் அற்ப சொற்பச் செலவுகளுக்கும் சில்லரை வியாபாரத்திற்குமே உலோகநாணயங்கள் வழங்கப் பெறுகின்றன. பெரிய வியாபாரப் பழக்கத்திறகெல்லாம் காகிதநாணயங்களும் நாணயப் பத்திரங்களுமேயாம். காகித நாணயம் அரசினராலும் மத்திய வங்கியாலும் சட்டதிட்டங்களுக் குட்பட்டு வெளியிடப்படும். செக்குகள் உண்டியல்கள் கம்பெனிப் பங்குகள் கடன் பத்திரங்கள் முதலான நாணயப் பத்திரங்கள் வியாபாரத்திற்காக உபயோகப்படுவன. பொருள் மாற்றுதலுக்கு அவை நாணயங்களைப் போலப் பயன்படுகின்றன; அவ்வேலையை உலோக நாணயங்களைக் காட்டிலும் செவ்வனேயும் எளிதாகவுஞ் செய்கின்றன. ஆயினும்,

காகித நாணயங்களும், நாணயப் பத்திரங்களும் உண்மையான மதிப்பை யுடையனவல்லவென்பது பிரசித்தம். அவையாவும் அந்தந்தக் காகிதத்திற் குறிப்பிட்ட மதிப்பையுடைய உலோக நாணயங்களுக்கு மாற்றிக்கொள்ளப் படத் தக்கன. உலோக நாணயங்களுக்குப் பிரதியாகவே அவை வழங்கப்பெறுதலான் எவரும் அதை ஒப்புக்கொள்ளுகின்றனர்.

தங்கநாணயத் திட்டமிருக்கிற தேசங்களில் இக்காகித நாணயங்களெல்லாம் சட்டப்படி செலாவணியாகும். தங்க நாணயங்களுக்கு அரசினராலோ அல்லது மத்திய வங்கியாலோ மாற்றிக் கொடுக்கப்படும் (வெள்ளி நாணய) திட்டமாகில் வெள்ளிக்கு அல்லது வெள்ளிக் காசுகளுக்குப்; இரட்டை நாணயத்திட்டமாகில் வெள்ளி அல்லது தங்கத்திற்கு (குறித்த சம்பந்தத்தில் மாற்றிக் கொடுக்கப்படும்.) தங்கநாணயத் திட்ட த்தை நிறுத்துவதால் காகித நாணயங்களை உலோக நாணயங்களுக்கு மாற்றிக் கொடார்கள் என்று அர்த்தமாம். அக்காலை சட்டப்படி செலாவணியாகக் கூடியது இக் காகித நாணயங்களும் உலோக நாணயங்களுமாகும்.

### இருப்புத் தொகை.

மேற்காட்டிய விஷயத்தை வேறொரு வகையாகவும் கூறலாம். காகிதநாணயங்களைத் தங்கத்திற்குச் சட்டப்படி மாற்றப்படத் தக்கனவாக விரும்பினும், அவை எல்லாவற்றையும், எப்பொழுதும் எல்லா ஜனங்களும் மாற்றிக் கொண்டிரார்கள். எனவே அக்காகித நாணயங்களை வெளியிட்ட மத்திய வங்கி அவற்றை மாற்றுவதற்கு வேண்டிய பூரா தொகையையும் (தங்கத்தை) இருப்பாக வைத்திருக்க வேண்டியதில்லை. ஒரு சிறு பாகத்தையே இருப்புத் தொகையாக அல்லது ஆதாரமாக வைத்திருந்தாற் போதுமானது. காகித நாணயம் 100 பங்கு செலாவணியி லிருந்தால் தங்கம் சுமார் 33 முதல் 50 பங்குவரை இருப்பாக இருக்கவேண்டும். இத்தொகையைப் பற்றிய நியமங்களும் சட்டங்களும் ஒவ்வொரு தேசத்திலும் உண்டு. அரசினர் அல்லது மத்திய பாங்கியின் யுக்தம்போலெல்லாம் காகித நாணயத்தைப் பெருக்கிக் கொள்ள முடியாது.

ஆனல் அவசரகாலத்தில் சட்டதிட்டங்களை அரசாங்கத்தார் அனுஷ்டிப்பார்களா? யுத்த காலத்தில் தங்க ஆதாரமின்றிக் காகிதநாணயத்தைவெளியிட்டனர். மேலும்ஒருதேசத்தின் வியாபாரம் கம்மிப்பட்டுப் பிறநாட்டுக்குச் செல்லவேண்டிய கடன் தொகை மிகுந்துவிட்டால் அதனுன்ன தங்கம் திடீரென்று குறைந்துவிடும். 33 முதல் 50 வரை இருக்கவேண்டிய தங்க இருப்பு அப்பொழுது இல்லாமற் போய்விடும். மத்திய வங்கியில் போதிய தங்கம் இல்லையென்று ஜனங்கள் அறிந்தவுடன் தங்கள் கையிலுள்ள எல்லாக் காகித நோட்டுக்களையும் தங்கமாக மாற்றிக்கொள்ள அவசரப்படுவார்களாதலின் மத்திய வங்கியைக் காப்பாற்ற அரசினர் தங்க நாணயத் திட்டத்தை நீக்கிவிடுவர். அதாவது காகித நாணயங்களை தங்கத்திற்கு மாற்றிக் கொடார், சட்டப்படி செலாவணியாகக் கூடியது இக்காகித நோட்டுக்களாகி விடும். இங்கிலாந்தின் முறை இதுவே.

### நாணய மாற்று.

காகித நோட்டுக்களை உள் நாட்டில் நாணயமாகவே உபயோகிக்க அரசினர் சட்டமிடலாம். ஆனல் வெளி நாட்டாருடைய வியாபாரக் கடனுக்கோ, அரசாங்கக் கடனுக்கோ அவை எவ்வாறு ஒப்புக் கொள்ளப்படும்? எல்லாத் தேசத்தினராலும் ஒப்புக் கொள்ளப்படுவது தங்கமொன்றே. தங்க நாணயத் திட்டம் இருந்த காலத்தில் (எல்லாத் தேசத்திலும் தங்கத்தின் விலை ஒன்று போலவிருப்பதனுல்) ஒரு தேசத்தின் நாணயத்தை அடுத்த தேசத்திற்கனுப்பிக் கடன்களைத் தீர்த்து வரவு செலவு செய்து கொள்ளலாம், தங்கம் இல்லாததினுல் தங்க நாணயத் திட்டத்தை விட்டகன்ற தேசத்தினர் தங்கத்திற்கென்ன செய்வர்?

வியாபார விஷயமாக அயல் நாட்டுக் கடன் ஏற்படாதபடி செய்யலாம்; எங்ஙனமெனின், இறக்குமதிகளைத் தடுத்து அல்லது அவற்றின் மேல் உயர்ந்த சுங்கவரிகளை விதித்து அயல் நாட்டு வியாபாரத்தைக் குறைக்கலாம். அரசாங்கக் கடன்கள் இருக்குமாகில் தவணை அல்லது நிறுத்துதல் கேட்கலாம். தங்கள் ஏற்றுமதி வியாபாரத்தை அதிகப்படுத்தலாம் அல்லது பிறரிடத்திற் கடன் வாங்கித் தங்கத்தை அனுப்பலாம். இம்முறைகள் எவையேனுஞ் சாத்தியப்படாவிட்டால் பிறநாடுகளுக்குச் செலுத்தவேண்டிய வியாபாரக் கடனுக்கும் அரசாங்கக் கடன்களுக்கும் தங்கத்தை அனுப்புவதெப்படி?

தங்க நாணயத் திட்டமிருக்கிற காலங்களில் எவரும் தடையின்றித் தங்கத்தை ஏற்றுமதி இறக்குமதி செய்யலாம். இப்பொழுதோ அங்ஙனஞ் செய்ய அரசினர் இடங்கொடார். இடங்கொடுத்தால் தங்களிடமுள்ள காகித நாணயங்களையெல்லாம் குறைந்த சம்பந்தத்திலேனும் தங்கத்திற்கு மாற்றி அன்னியநாட்டு வங்கிகளில் வட்டிக்கு விடுவர் எல்லா ஜனங்களும்; அப்பொழுது உள்ள தங்கமும் போய்விடும். ஆனல் கட்டாயமாய்ச் செலுத்தித் தீரவேண்டிய அயல்நாட்டு வியாபாரக் கடனுக்கோ, அரசாங்கக் கடனுக்கோ தங்கம் ஏற்றுமதியாக வேண்டும். எனவே இதற்குமாத்திரம் விசேஷித்த அனுமதியின்பேரில் இடங் கொடுப்பார். எனவே தங்க நாணயத் திட்டமகன்ற தேசங்களில் தங்க ஏற்றுமதி இறக்குமதியின்பேரில் தடைகள் ஏற்படுத்தப்படும்.

தங்க நாணயத் திட்டம் என்பது:—ஒரு தேசத்திற் சட்டப்படி செலாவணியாகக் கூடிய நாணயம் தங்க நாணயமாக இருக்குமென்பதும், எல்லாக் காகித நாணயமும், நாணயப் பத்திரங்களும் மேற்படி தங்க நாணயத்திற்கு சட்டப்படி மாற்றிக் கொடுக்கப்படத்தக்கனவாக இருக்கவேண்டு மென்பதுமேயாம். தங்க நாணயத் திட்டம் நீங்கிய காலத்தில் காகித நாணயமும் சட்டப்படிசெலாவணியாகத்தக்கதாகிவிடுமென்றும், தங்க ஏற்றுமதி இறக்குமதியில் தடைகள் ஏற்பட்டுவிடுமென்றும் அறிகிறோம்.

(சுதேசமித்திரன்.)

---


# பிரப்பங்குளம் மரக்காலை.

—:*:—

எங்கள் மரக் காலையில் பனைமரம், சலாகைகள், பாலை, வேம்பு பலா, முதிரை, மா, சமண்டலை, சப்புமரம், வேண்டிய பிரமாணமுள்ள தீராந்திகள், பலகைகள், சட்டங்கள், வாங்கு பேசை அலுமாரிகள், விறகு என்னுமிவைகள், வைக்கோல் நெல் இன்னும் வேண்டிய பொருள்களும் எந்த நேரமுங் கொடுக்கப்படும்.

**ஒருமுறை எங்கள்காலையை வந்துபாருங்கள்.**

மு. தம்பியையா,
பிரப்பங்குளம்றோட்டு
வண்—மேற்கு, யாழ்ப்பாணம்.

(Y. 37. 9-8-3-34.) (வி)

# குடைமார்க் ஓடுகள்.



உற்பத்தியாக்குவோர்:

ஐரோப்பிய மதுரைக் கம்பெனியார்.

இலேசானது; பெலனுனது; மலிவானது.
அடைமழைக்குக் கசியாது; உஷ்ணம் வீசாது.
10 தங்கமேடல்கள் பரிசாகப்பெற்றன.
குடைமார்க் ஓடுகளே குவலயமெங்கும் அபிமானிக்கப்படுவன.

காங்கேசன் துறை அரசினர் சுகஸ்தானத்திற்கு 55000 குடைமார்க் ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.
118 ஓடுகள் 100 சதுர அடிவிஸ்தாரத்தை மூடப்போதுமானவை.
இந்த இனத்திலே கண்ணுடி ஓடுகளும், தளவரிசைக் கற்களும், அழுத்தமானபைப்புக்களுமுண்டு.
துறைமுகத்துக்கு அருகாமையில் கடற்கரைத்தெருவில் புதிதாய்த் திறந்திருக்கும் ஸ்ரோரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. செருபீம் & பிறதர்,
ஏஜென்ட்: பெரியதெரு. யாழ்ப்பாணம்.

Y. 12—7-5-34

கோடைகாலத்திற் பிடிக்கும்

தலைவலியைத் தடுப்பதற்காக,

ஒருபோத்தல்

# லிட்டில்ஸ் ஒறியண்டல் பாம்

# தைலத்தை

வாங்கிவைத்திருங்கள்.

**இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்.**

Y 18 11-2-33—10-2-34)


### எல்லோருக்கும் சுதந்தரம்.

—:*:—

"பலாத்காரம் அற்ற முறையில் நாட்டிலுள்ளோர் நினைத்தவாறு சுகவாழ்வு வாழ்வதே சுயராஜ்யமென்பது. ஏழையும் பணக்காரனும் வித்தியாசமின்றி அச்சுதந்தரத்தை அநுபவிக்கலாம். சாத்வீக ஒத்துழையாமையே அவ்வித விடுதலைக்குச் சிறந்த வழி. அவ்வித முறையைக் கொண்டுதான் பொதுஜன ஆதரவை நாம் பெறமுடியும். அப்பொழுதுதான் எவ்வித எதிர்ப்பையும் தாங்கி நிற்கும் சக்தி நமக்கேற்படும். பெரும் தீர்க்கதரிசிகளும் இவ்வித முறையில் உறுதிகொண்டு எவ்வித எதிர்ப்பையும் தாங்கி நின்றுள்ளார்கள். சாத்வீக முறையினின்றும் சிறிதும் பிறழாது நாம் இருந்தாலன்றி நம் முன்னேற்றம் பெரிதும் தடைப்பட்டுவிடும்."

—மகாத்மா.

### எட்டடி மீசை.

வடநாட்டில் லதியான சமஸ்தானத்தைச் சேர்ந்த தேசூர் அர்ச்சுன தாஸ்கர் என்பவருக்கு சுமார் 8 அடி நீளமுள்ள மீசையிருக்கிறதாம். ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு அவர் மீசை 8 அடி அதாவது 96அங்குலம் இருக்கிறது சுமார் ஐக்தேகால்முழம்; உலகத்திலேயே ஒரு நீண்டமீசை வீரர் இவர்தான். இவர்தமது மீசையை நன்றாக முறுக்கிச் சுருட்டி வைத்துக் கொள்கிறாராம்.

### ஜெகோல் தங்கக் கோயில்.

சீனுவில் ஜெகேல் நகரத்தில் ஓர் அற்புதமான தங்கப் புத்தர் கோயிலொன்று இருக்கிறது. அதில் நவமணிகள் இழைத்த பல தங்கப் புத்த விக்ரஹங்கள் இருக்கின்றன இந்தக் கோயில் அதிசயமான வேலைப்பாடுடையதாம் இந்தக் கோயிலின் மாதிரி ஒன்றை இப்பொழுது அமெரிக்கா சிக்காகோ நகரில் நடந்து வரும் உலகப் பொருட் காட்சியில் வைத்திருக்கிறார்கள்.


"காண்டிநேண்டல்"
கம்பெனியின் தொழில்
வருமானம் Rs. 1,500,000.
ஜீவிய நிதியில் சேருங்கள்.
மாதம் ரூபா 2.
10 வருஷத்தில் ரூபா. 500
ஆதாயம் பெறுவீர்கள்.
ஏழைகளும் செல்வரும்
விரும்பக்கூடிய கம்பெனி.
கிளை ஆபீஸ்கள்: சாவகச்சேரி, கண்டி, மட்டக்களப்பு.

E. P. புயூஎல், உடுவில், மானிப்பாய்,
இலங்கைப் பிரதம பரிசோதகர்,
(H. 77. 17-8 33 to 16-2-34.)

### யாழ்ப்பாணச் சரித்திரம்.

ஆக்கியோன் C. இராசநாயக முதலியார்.

பாடசாலைகளிற் படிப்பித்தற்கு உகந்தது என இலங்கை வித்தியாகர்த்தரால் 1933-ம் வருஷம் ஆகஸ்மோதம் 21-ம் தேதி அங்கீகாரமானது:—

பிரதியொன்றன் விலை

| | |
|---|---|
| அட்டைக்கட்டடம் | ரூபா. 1-75 |
| சாதா கட்டடம் | ரூபா. 1-50 |

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சண்முகநாதன்புத்தகசாலையிலும், மற்றும் புத்தக வியாபாரிகளிடமும் பிரதிகள் பெறற்பாலன.

(Q. 84. 4-9-33to3-12-33)

**Dr. வஸ்தியாம்பிள்ளையின் அவுஷதங்கள்,**

குன்மா

குன்மத்தை அதிவிரைவில் மாற்றக்கூடிய அவுஷதக்கலவை.

இக்கலவை அஜீரணம் வயிற்றெரிவு, வயிற்றுப்புகைச்சல, புளிப்பு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, குத்து, பிரட்டல், வாய்வு, நெஞ்செரிவு, அஜீரணபேதி இவைகளைத் தீர்க்கும். நல்ல பசியைத் தரும்; சமிபாட்டைத் துரிதப்படுத்தும். இரைப்பையின் பெலவீனத்தைப் போக்கும் எல்லாவகையான குன்மரோகங்களையும், குன்மவாயு ரோகங்களையும் ஆற்றும்

சுடமான ஒ த்திராவகம்.

சேர்ந்த டக்டர்களால் செய்யப்பட்டது.


உடனுக்குடன் சுகத்தைத் தரக்கூடியதும், சிறுக்கள் முதல் பெரியவர்களிருயாரேரும் உபயோகிக்கக் கூடியதுமாய்ச் செய்யப்பப்பட்டது. இதனால் தீரும் வியாதிகளோ அனந்தம்; அவற்றுள் சில கூறுவாம்:—

வயிற்றுவலி, வயிற்றுப் பிசம், வயிற்றிரைச்சல், வயிற்றால் அடிக்கடி போகுதல், வாய்வு, வயிற்றுளைவு, சமியாக்குணம், புளித்தேப்பம், நெஞ்செரிவு, பசிமந்தம், மந்தம், புளிப்பு, மப்பு, மாந்தசுரமுதலிய வியாதிகளை மாற்றும். குழந்தைகட்குக் காணும் சர்வரோகங் கட்கும் தனிமையாகவும் ஆகாரத்துடனும் கொடுக்கலாம்.

இலங்கை ஆயுள்வேத வைத்தியசாலை,

இல. 101 பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Q. 87. 7-9to6-12-33)



# நெல்லுக் குற்றும் யந்திரம்.

25 சதத்தோடு 10 புசல்நெல்லு

றஸ்ரன்-ஹோர்ன்ஸ்பி யந்திரம், "லிஸ்ரர் டீஸல் எண்ணெய் யந்திர"மூலமாகக் குற்றித் தீட்டலாகும்


## நெல்லுக்குற்றுதற்கும் தீட்டுதற்குமான யந்திரம்

மாத்திரம் ரூபா 600

முழுயந்திரமும், (குற்றும் யந்திரமும், குளிர்ச்சி இடமும், கரி இடமும் அமைக்கப்பட்ட என்ஜின், யந்திரநாடாக்கள்உட்பட)

ரூபா 2465.

ரொக்கத்திற்குக் கழிவுண்டு.



தனி ஏஜன்டர்:

பிறவுண் அன் கோ லிமிட்டெட்.

கொழும்பு, ஹற்றன், கண்டி, நாவலப்பிற்றி, பண்டாரவளை.

(Q. 48. 29-6—28-9-33. வ)




எழுதலைமுறையாய் அனுபவமுள்ள மருந்துகள்.!

சமஸ்தான வைத்திய நிபுணரான சி. எம். சாமி அவர்களின் மருந்துகள் உலகமெங்கணும் புகழ்பெற்றவை. உண்மையான குணமுள்ளவை. உள்ளூர், வெளியூர் வாசிகளால் நன்கு மதிக்கப்பெற்றவை.

உலகம்போற்றும் மருந்துகள்! உபயோகத்திலுஞ் சிறந்த குணங்கள்!

நீங்கள், என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானால்

மகா வீரிய

## தங்கபஸ்பம் சாப்பிடுங்கள்.

மேகரோகங்கள் கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல் குன்மம், சூலை முதலிய சகல கொடிய வியாதிகளும் தீரும்.

தழிர்ந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கண்டு தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய ஆபூர்வசக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை.

ஒருமுறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

24. சான் பஸ்பம் விலை ரூ. 10

## ருநாக பஸ்பம். (மூல வியாதிக்கு)

மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும், உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். ஆப்ரேஷன் செய்யவேண்டிய அவசியமில்லை, முளை தானே கரையும். சீழ்மூலம், இரத்த மூலம், குத்தல், மூல முளை, மலபந்தம் முதலியவை குணமாகும்.

புட்டி 1-க்கு விலை ரு. 4—0—0.

## குருதாளக பஸ்பம். (இருமலுக்கு)

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் சரி, எட்டுவித காசமும் தீரும்.

24-வேளைபுட்டி 1-க்கு விலை ரு 4—0—0.

## குருஅப்ரேக் செந்தூரம். (நீரழிவுக்கு)

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரைச் சத்தையும் குறைத்துத் தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி இரத்த விருத்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் நீக்கும்.

புட்டி 1-க்கு விலை ரு. 15—0—0. தபால் சார்ஜ் வேறு

ஏராளமான நற்சாட்சிகளை விபரமான கியாட்லாக்கில் பார்க்கவும்.

குறிப்பு:— பினாங்கு, சிங்கப்பூர், மோரிஸ், நெட்டால், தென் ஆபிரிக்கா முதலிய பிரதேச வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். வி. பி. சிஷ்டமுள்ள பிரதேச வாசிகள் ரூ 5—0—0 அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி,

வி  வைத்தியசாலை பழனி. S. I.

Q 41 22/6-21/9/33. வி

✻ இனம் ரூபா 1000  இனம் ரூபா 1000. ✻

# சேர்: பொன். இராமநாதன்

அவர்களும்

கொழும்பு விவேகானந்த சபையாரும்

## அபிமானித்த ஓடுகள்.

சேர்; இராமநாதன் தமது கட்டடங்களுக்காகப் பல்வேறு ஓட்டுக் கம்பனியாரின் ஓடுகளை வாங்கிச் சாஸ்திர ரீதியாகப் பரீட்சித்த பின்னர் பவுண்மார்க் ஓடுகளே மிகத்திறமானவை என்று அநுபவத்திற் கண்டு அவற்றை உபயோகித்தார்.

கொழும்பு விவேகானந்த சபையிலிருந்து "பவுண்மார்க்" ஓடுகளே திறமானவையென்று பல என்சினியர்மார் தெரிவித்ததாகவும் எங்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள் கன்னியாஸ்திரி மடங்கள், தேவாலயங்கள் யாவும் பவுண்மார்க் ஓடுகளாலேயே வேயப்பட்டிருக்கின்றன.

கவுண்மேண் ஏசெண்டர் அவர்களின் ஆடர்ப்படி பிறவூர்களுக்கு அனுப்பப்பட்டு வருபவையும் இவைகளே.

### ஏமார்ந்து விடாதீர்கள்!

சில ஓட்டுக் கம்பனியாரிடம் இருந்து தாம் பெறும் நன்மையைக் கருதிக் கட்டடத் தொழில் செய்யும் சிலர் தாம் கட்டும் வீடுகளை அக்கம்பனிகளின் இளக்கமான ஓடுகளினாலேயே வேயவேண்டுமென்று சிபாரிசு செய்கிறார்கள் என்று அறிகிறோம்.

### பிறர் வார்த்தையினால் ஏமாரவேண்டாம்!

நீங்களே ஒவ்வொருவித ஓட்டையும் பரீட்சித்துப் பாருங்கள்!

அவற்றோடு

### பவுண்மார்க் ஓடுகளையும் ஒத்துப்பாருங்கள்!

பவுண்மார்க் ஓடுகளைப் பரீட்சிக்க விரும்புவோர்க்கு ஒரு ஓடு மாதிரிக்காக இனமாய்க்கொடுக்கப்படும்.

மெஸேர்ஸ்: S .வீரகத்திப்பிள்ளை & சன்ஸ்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, காரைநகரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

டெலிபோன் நம். 93.

தந்தி விலாசம்: "ஹாமி", வல்வெட்டித்துறை,

✻ சில வியாபாரிகள் பவுண் மார்க் ஓடு தங்களிடம் இருக்கிறதாகச் சிலரை ஏமாற்றி விற்கிறார்களென அறிகிறோம்.

ஆனால் பவுண்மார்க் ஓடுகள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறையில் எங்களிடத்திலும், காரைநகரில் எங்கள் Sub Agent சி. க. ஆறுமுகம்பிள்ளையிடமுமல்லாமல் இவ் யாழ்ப்பாண டிஸ்திரிக்கில் வேறு எவராவது பவுண்மார்க் ஓடு விற்கிறதாகப் போதிய அத்தாட்சியுடன் அறிவிப்பவர்களுக்கு ரூபா (1000) ஆயிரம் இனமாய்க் கொடுக்கப்படும்

31-8 33&4-9-33.

## இலங்கையின் சீனித் தொழிற்சாலை?

### அமெரிக்கரின் முயற்சி.

### அரசினரின் ஊக்கம்

அமெரிக்காவில் உள்ள சிலர் இலங்கையில் ஓர் சீனித்தொழிற் சாலையை நிறுவ முயற்சி செய்கிறார்கள் என்றும், அவர்கள் அதற்கு அரசினரை அநுமதிகேட்டிருக்கின்றனர் என்றும் அறிகிறோம். இவ் விஷயமாக விவசாயப்பகுதியார் ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர் எனவும் தெரிகிறது. கடைபெறும் ஒழுங்கின்படி, அரசினர் ஊரவர்களுக்குக் கரும்பு விளைக்க நிலங்கள் குத்தகைக்குக் கொடுப்பர் என்றும், ஊரவர்களால் விளைக்கப் பட்ட கரும்பை அமெரிக்க கம்பனியார் விலைக்கு வாங்கி விவசாயிகளுக்குப் பண உதவி செய்வார் என்றும் தெரிகிறது.

டிெ கம்பெனியில் உள்ள பங்காளிகள் யாவரும் அமெரிக்கரோ அன்றேல் இலங்கையரும் அதில் பங்காளிகளாகச் சேரலாமோ என்பது இன்னும் தெரியவில்லை.

தற்போது இலங்கையானது தனக்குத் தேவையான சீனி முழுவதையும் அந்நிய நாடுகளில் இருந்தே இறக்குமதிசெய்கிறது. பெருந் தொகையான சீனி ஜாவாத்தீவில் இருந்தே வருகிறது.

### மாணவர்க்கு மாறாக வழக்கு.

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த மாரிமுத்து கனகரத்தினம், சின்னத்தம்பி வேலுப்பிள்ளை என்னும் இரு மாணவரும், பகிரங்கப்பகுதியில் உதவி ஓவர்சியராயுள்ள குணரத்தினம் என்பவரும், பறங்கித்தெருப் பல்வைத்தியர் மிஸ்டர் சார்ல்ஸ் பத்திரானா என்பவரின் மகன் ஆரியவன்ஸ பத்திரானா துவிச்சக்கரவண்டியிற் சென்றபோது அவனிடம் இருந்த 281 ரூபா 45 சதத்தைக் களவாண்டு அவனைப் புடைத்தார்கள் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் சென்ற திங்கட்கிழமையன்று குற்றம் சாட்டப்பட்டனர்.

பொலிஸ் உதவிப்பரிசோதகர் D. H. R. A. கொறியா வழக்கை நடத்தினர். எதிரிகளுக்காக நியாயவாதி மிஸ்டர் V. ஜோசப்பும் நியாயதுரந்தரர் S. A. சபாபதியும் ஏற்பட்டனர்.

ஆரியவன்ஸ பத்திரானா கொடுத்த சாட்சியம் பின்வருமாறு:

நான் ஓர் மாணவன்; ஜூலைமாதம் 8-ம் தேதி என்தகப்பனார் 281 ரூபா 45 சதத்திற்கு கந்தையாச் செட்டியிடம் ஓர் உண்டியற் பத்திரம் (செக்) வாங்கிவரும்படி என்னை அனுப்பினர். பின்னேரம் 5 1/2 மணியளவில் நான் என் துவிச்சக்கரத்தில் பணத்தைக் கொண்டுசென்றபோது பெரியகடைத் தவறணைக்குச் சமீபமாக இந்த 3 எதிரிகளையும் கண்டேன். 3-ம் எதிரியான குணரத்தினம் என்னைமறித்து என் துவிச் சக்கரத்தைப் பிடித்து என்னைத் திரும்பிப் போகும்படி சொன்னர். நான் மறுத்தேன்; உடனே இரண்டாம் எதிரி என்கழுத்திற் பிடித்துத் தள்ளினன். என் சட்டைப் பையினுக்குள் கைவிட்டுப் பணம் எடுப்பதாக எனக்குத் தெரிந்தது. அந்நேரம் தெருவீதியால் வண்டிகளும் மோட்டார் ரதங்களும் சென்றன."

டிெமாணவனின் தந்தையான மிஸ்டர் சார்ல்ஸ் பத்திரானா பின்வருமாறு சாட்சியம் அளித்தார்.

"1ம் 2-ம் எதிரிகள் சனிக்கிழமை இரவு என்னிடம் வந்து மகனுடைய துவிச்சக்கரவண்டியின் மணியையும் பணத்தையும் தந்து தாம் அவற்றை வேடிக்கையின் பொருட்டு எடுத்ததாகச் சொன்னார்கள். நான் இவற்றைப்பற்றி முன்னமே பொலிசார்க்கு அறிவித்துவிட்டமையினுல், அவற்றை ஏற்க மறுத்து, பொலிசாரிடம் அப்பொருள்களை ஒப்புவிக்கும்படி சொன்னேன்.

வேறும்சில சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டபின் நீதிபதி விசாரணைப் பிரதிகளைச் சட்டத்தலைவருக்கு அனுப்பினர்.

### நீதிஸ்தலத்தில் பாம்பு.

சென்ற செவ்வாய்க்கிழமையன்று பகல் 11 மணியளவில் தண்டகமுவப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் நீதிபதி விசாரணை நடாத்திக் கொண்டிருக்கையில், அவர்தலைக்கு மேலாக நீதிஸ்தலவளையொன்றில் ஓர் நாகபாம்பு காணப்பட்டது. அங்கேநின்ற பொலிஸ்காவலன் ஒருவன் உடனே தன் துப்பாக்கியால் ஒரேமுறையில் அப்பாம்பைச்சுட்டுக் கொன்றான்.

## குற்றங்கள் பெருகக் காரணம்?

—:O:—

### பொலிசாரும் தலைமைக் காரருமாம்!

### நியாயவாதியின கூற்று.

கண்டிப் பொலிஸ் நீதிஸ்தலத்திற் சென்ற திங்கட்கிழமையன்று நியாயவாதி மிஸ்டர் ஜோர்ஜ் E. டி. ஸில்வா ஓர் சாட்சியைக் குறித்து விசாரணை செய்யும்போது "பொலிசாருக்கு மாறாகச் சாட்சியம் கொடுத்தால் நடப்பது என்ன என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார். பின்னும் அவர்,"இலங்கையில் ஏற்படும் குற்றங்களில் அரைவாசிக்குக் காரணம் தலைமைக் காரரும் பொலிசாரும் தம் கடமையைச் சரியாகச் செய்யாமையே" என்றார்.

### விவாகம்.

சேருப்பகுதித் தலைவராயிருந்து இளைப்பாறியுள்ள முதலியார் சு. திருச்சிற்றம்பலம் அவர்களின் புத்திரனும் கண்டி காணிப்பதிவுகந்தோரில் கடமைபார்ப்பவருமான ஸ்ரீ பாலசுப்பிரமணியமவர்களுக்கும், தென்னிந்தியாவில் பொலிஸ் தலைவராயிருந்து தற்போது இளைப்பாறியிருக்கும் பன்னாலை ராவ்சாகிப க. சிவசிதம்பரம் பிள்ளையவர்களின் புத்திரி ஸ்ரீமதி மீனாட்சியம்மாளுக்கும் சென்ற வெள்ளிக்கிழமை (1-9-33) பகல் பல்லேலர் சமூகத்தில் மணமகளில்லத்திற்றானே விவாகம் நிறைவேறியது. மணமக்கள் அட்ட ஐஸ்வரியங்களையும் பெற்று இனிது வாழ்வாராக.

### விசர் நாய்க்கடி.

சென்ற இரவு 11 மணியளவில் வண்ணார் பண்ணை இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக வசிக்கும், குத்தகை காரர் ஸ்ரீ V. S. விநாசித்தம்பி அவர்கள் தமது நாயால் வாறுகக் கடிக்கப்பெற்றார் எனறு அறியலானோம்.

குறித்த நாய் சென்ற சில தினங்களாக வீட்டில் இல்லாது திரிந்தது. சென்ற இரவு வீட்டிற்குள் நுழைந்து பிள்ளைகளைக் கடிக்க எத்தனிக்கும்போது ஸ்ரீ விநாசித்தம்பி தடுக்க முயற்சிக்கையில் அவரின் தேகத்திற் பலவிடங்களிற் கடித்தது. ஸ்ரீ விநாசித்தம்பி உடனே கொழும்பிற்கு அனுப்பப்பட்டார். நாய் இன்னும் பிடிபடவில்லை. இருவித்தியாசாலைகளுக்கு அணித்தாக இந்நாய் ஊடாடுவதனுல், வித்தியாசாலைப் பிள்ளைகளுக்கு ஏதும் அநர்த்தம் விளைக்குமுன், இதனைத் தேடிப்பிடித்துக் கொன்றுவிடுதல் சிறந்ததாகும்.

### யாழ்ப்பாணச் சிறைக்கூட்டத்தில் உண்ணுவிரதம்.

இற்றைக்குச் சின்னுட்களுக்குமுன் யாழ்ப்பாணச் சிறைக்கூடத்தில் உள்ள சிறையாளர் பலர், தமக்கு அளிக்கப்படும் உணவு திருப்திகரமாயில்லாதிருப்பதனுல் உண்ணுவிரதம் அநுட்டித்தமை முன்னர் இப்பத்திரத்தில் வெளிவந்ததாகும்.

மறியற்சாலைத்தலைவர் இதுவிஷயத்தை விசாரித்தறியும்படி இப்போது ஒருவரை நியமித்திருக்கிறார். உள்நாட்டு மந்திர நிர்வாகசபையிலும் சென்ற திங்கட்கிழமையன்று இதுவிஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணச் சிறைக்கூடத்தில் நெடுங்காலத் தண்டனை பெற்றுள்ள 300 சிறையாளர் இருக்கின்றனர்.

### எட்டியாந்தோட்டை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில் கும்பாபிஷேகம்,

எட்டியாந்தோட்டையிலே அங்குள்ள சிவநேயச் செல்வர் பலராற் புதிதாக அமைத்துள்ள ஆலயத்தில் சர்வான்மாக்களும் அனுக்கிரகஞ் செய்யும் பொருட்டு எழுந்தருளுமாறு ஸ்ரீ கதிர்வடிவேலாயுதப் பெருமானுக்கு நிகழும் ஸ்ரீமுக வருஷ ஆவணி மீ 27-ந்திகதிக்குச் சரியான 11-9-33ல் வரும் சோமவாரமும் சப்தமித்திதியும் ரோகணி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் வரும் தனுஸ் இலக்கின முகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

10-9-33 ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் 6 மணியளவில் திருவாளர் தா. முருகேசபிள்ளை அவர்களால் 'ஆலயவழிபாடு' என்னும் விஷயமாகவும், திருவாளர் சி. சரவணமுத்து அவர்களால் 'தமிழர் கடவுட்கொள்கை' என்ற பொருள் பற்றியும் உபந்நியாசங்கள் நடத்தப்படும். அத்துடன் வேறுசில அன்பர்களும் அநுசாரமான விஷயங்களைக் குறித்து பிரசங்கம் செய்வார்கள் என்று டிெ ஊர் சைவாபிமானிகள் தெரிவிக்கின்றனர்.

## பர்ணகுடி யாத்திரை.

### உலகசிரேட்டரின் புன்னகைதவழ்ந்த முகம்.

### அடிகளின் சாதகத்தைப்பற்றிய குறிப்பு.

ஸ்ரீ K. இராமச்சந்திரன் அவர்கள் ஆங்கில தமிழ் இந்துசாதனப் பிரசுரங்கட்கெனப் பிரத்தியேகமாக எழுதியனுப்பியது.

நானும் எனது மனைவியுமாக ஆகஸ்டு மாதம் 28-ந் தேதி பூனாவை அடைந்தோம். உலக சிரேட்டர், இராஜவெறிபிடித்த அதிகாரிகளையும் தலைவணங்கச் செய்யும் சக்திவாய்ந்த மகாத்மன், அஹிம்சா மூர்த்தியாகிய காந்தியடிகளின் தரிசனம் பெறுதற்காகவே இந்தப் பூனாநகரை யடைந்தோம். புகைரதஸ்தானத்தை யடைந்ததும், நாம் நேரே "பர்ணகுடி" மாளிகையை நோக்கிச் சென்றோம். ஆனால் நாம் உடனே அடிகளைக் கண்டு தரிசிக்க முடியவில்லை. வைத்தியநிபுணர்கள் ஒருபுறம், பத்திரிகை நிருபர் ஒருபுறம், அடிகளின் நண்பர்கள் ஒருபுறமாக அடிகளுக்குச் சைத்தியோபசாரம் செய்து நின்றமையால் அன்று பின்னேரம் வந்து காணும்படி எமக்கு அறிவிக்கப்பட்டது.

இரவு 7-15 மணி பர்ணகுடி மாளிகையை நாம் அடைந்ததும், அடிகளின் மருமகரும் காரியதரிசியாகக் கடமைபார்ப்பவருமாகிய ஸ்ரீஜத் நிரிகப்ஜி அவர்கள் மேன்மாடிக்குப் போகும்படி எமக்கு வழிகாட்டினர். அங்கே நாம் அடைந்ததும் நீனபந்து அன்டிறூஸ் பாதிரியார் எம்மைக் கண்டதும் புன்னகை தவழ்ந்த முகத்தினராய் உண்மைக் கிறிஸ்தவமாதிரியாய் எம்மை வரவேற்றார். எமக்குமுன் தரிசனஞ்செய்யச் சென்றவர்கள் யாவரும் மேன்மாடி விருந்தையில் எப்போது உத்தரவு வரும், எப்போது அடிகளின் வதனாரவிந்தத்தைக் கண்டு மகிழ்வது என்னும் அங்கலாய்ப்புடன் நின்றனர். சிறிது நேரம் சென்றதும் மகாத்மாவின் ஐரோப்பிய சிஷ்யையான மிஸ் ஸ்லேட் என்னும் மீராபென் அம்மையார் எம்மெல்லோரையும் உள்ளே வரும்படி அழைத்தார். உட்சென்றோம். ஆங்கு கண்ட காட்சி தான் என்னே! கருணைகூர் முகம் கொண்ட எம் ஐயன் ஓர் கட்டிலிற் படுத்திருந்தார். பக்கலில் கவியாகிய சரோஜினிஅம்மையார் ஓர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அடிகளின் முகப்பொலிவை என்னென்று எடுத்துரைப்பது? உண்ணுவிரதம் அநுட்டிக்காதவர் போலவே மிக்க சாந்தியுடன் அவர் இருந்தார். 1927-ம் ஆண்டு நவம்பர் மாதம் அடிகளை இவ்விடம் கண்டேன். அன்று தொடக்கம் இற்றைவரை ஆறு வருஷமாகிவிட்டன. ஆனல் அடிகளின் தேகநிலைமையில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை என்றே எனக்குத் தோற்றியது. இல்லை! அவர் முன்னரிலும் பார்க்க இப்போது இளமையுடன் காணப்பட்டார். ஆன்மார்த்த விஷயங்களில் அவர் அறிவு முதிர முதிர, அவருடைய தேகநிலைமையும் இளமையடைகின்றதுபோலும்! இதில்தான் அடிகளார் அடிக்கடி அநுட்டிக்கும் உண்ணுவிரதங்களின் இரகசியம் தங்கியிருக்கின்றது. நாடோறும் 4, 5 முறை விலாப்புடைக்க உண்ணும் எம்போலியர்க்கு அடிகளாரின் உண்ணுவிரத மேன்மை எவ்வாறு புலப்படும்.

7½ மணியடித்ததும் பிரார்த்தனை நடந்தது 15, 20 நிமிஷங்களாக நடந்த பிரார்த்தனையின் மகத்துவத்தைக் கூற எம்போலியரால் முடியுமோ!

பிரார்த்தனை முடிந்ததும் நாங்குவந்தவர்கள் ஒவ்வொருவராய் அடிகள் சமீபம் சென்று விடைபெற்றனர். 10 வயதுள்ள ஓர் பையன் கதர்த்துணியால் மூடியிருந்த அடிகளின் பாதங்களை முத்த மிடுவதற்காகச் செல்லையில் மகாத்மா புன்னகையுடன் அவன் கன்னத்தில் அடித்தார். பையனும் புன்னகையுடன் பின்நின்றான். 8 மணியளவில் அடிகளிடமும் மீராபென் சரோஜினிதேவி முதலியோரிடமும் விடைபெற்றுக் கொண்டு பர்ணகுடி மாளிகையை விட்டு நீங்கினோம். நாம் இலங்கைவாசிகள் என்பதை அறிந்த மீராபென் அம்மையார் மிக்க புளகாங்கிதம் கொண்டவராக, "25 ஆண்டுகளுக்குமுன் இலங்கைக்குச் சென்றிருக்கிறேன்; இலங்கையின் வனப்பு என் உள்ளத்தை விட்டு அகலாது" என்று எனது மனைவிக்குக் கூறினர்.

### பர்ண குடி.

பூனாப் புகைரதஸ்தானத்தில் இருந்து பர்ணகுடிமாளிகைக்குச் செல்லும் தெரு ஸஸூன் தெரு எனப்படும். பூனா, பம்பாய் எனும் இரு நகரங்களிலும் உள்ள தனவந்தர்கள் வசிப்பது இவ்வீதியிலேயே. வீதியின் இரு மருங்கிலும் மகுடமன்னர், பட்டவர்த்தனர், கோடீஸ்வரர் என்பவர்களுக்குரிய மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் விளங்காநிற்கும். இம்மாளிகைகள் யாவற்றிலும் "பர்ணகுடி" மாளிகை எவ்வாற்றானும் சிறந்தது. அது மேற்கூறிய மாளிகைகளில் நின்று ஓர் தடாகத்தால் பிரிக்கப்பட்டு ஓர் மலையேல் பொலிவுறுகின்றது. அதனோடு சிற்பசாஸ்திரிகள் மெச்சும் ஓர் ஆலயமும் உண்டு. அதனோடு மகாத்மாவின் தங்குமிடமாக விளங்குதலால் அஃது புண்ணியக்ஷேத்திரமாக விளங்குதில் ஓர் ஆச்சரியமில்லை.......

இக்கடிதத்தை முடிக்குமுன் மகாத்மாவின் சாதக சம்பந்தமாகச் சில கூற விரும்புகிறேன். கொழும்புப் பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட்டதோர் ஜாதகக்குறிப்பில் இருந்து 21—8—33 வரை அவருக்குக் கஷ்டகாலம் என்று முன்னர்ப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டுவிட்டேன். அக்காலம்வரை அடிகளுக்குக் கேதுதிசையாகும். கேது ஞானகாரகனுபடியால் மகாத்மா ஆன்மார்த்த விஷயங்களில் மிகவும் சித்திபெய்தியிருக்கிறார். ஆனல் உலக விஷயங்கள், அதாவது அரசியல் விஷயங்களில் அவ்வளவு சித்தியடையவில்லையென்றே சொல்ல வேண்டும். 21—8—33 தொடக்கம் சந்திரதிசை அடிகளுக்கு நடக்கிறது. அத்திசையில் உலக விஷயங்களில் மகாத்மா மிகவும் சித்திபெறுவார் என்பது நிச்சயம். சந்திரதிசையில் பிரஜைக்கும் அரசினர்க்குமிடையே பரஸ்பர குரோதம் ஏற்பட நியாயமில்லை. எனவே தற்போது அரசினர்க்கும் மகாத்மாவுக்குமிடையேயுள்ள பிணக்குக் கூடிய சீக்கிரத்தில் முடிய அவரும் வில்லிங்டன் பிரபுவும் நாட்டிற் சமாதானத்தை நிலைநிறுத்துவர் என்று நிச்சயமாய் நம்பலாம்.

## உபதேச காண்டம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி.)

அடி கீழே இறங்கி இப்பால் இறங்கமுடியாமை கண்டு "என் பிராணநாயகரே, இனிமேல் இறங்கமுடியவில்லை; இதற்கென்னசெய்வேன்" என்று சொல்லிக் கலங்கினாள். தன் மனையாளின் பரிபவத்தைப் பார்க்கப் பொறுகவனுப் புண்டரீகன், தன் குடுமி அசைபவும் பூணூல் துவளவும் இளைக்க இளைக்க வேகமாய் மீண்டு முனிவரிடம் ஓடிப்போய் "ஓ. மகானுபவரே, அடியேன் இறங்குதியென்று சொன்னமாத்திரத்தே நாலு அடி இறங்கினாள்; அப்பால் இறங்க முடியாது தியங்குகின்றாள்; தேவரீரே இந்த ஆபத்தைக் காத்தருளவேண்டும்" என்று பணிந்து நின்றான். துருவாசமுனிவர் அப்பிராமணனை நோக்கி 'புண்டரீகனே, அவளை முன்னர்க்கூடிய ஆடவர் எல்லாரும் அங்கே வந்து இறங்குதி, இறங்குதி என்று தனித்தனி சொன்னால் உன் மனைவி நான்கு நான்கு அடியாக இறங்கி யிறங்கி நிலத்தில் வந்து சேருவாள்" என்று சொல்ல, அப்பேதைப் பிராமணன், அவர் சொற்படியே அந்தப்பட்டினம் முழுவதும் விசாரணைசெய்து தன் மனையாளோடு முன்கூடியவர்களையெல்லாம் கூட்டிக்கொண்டுவந்து அவர்களைக்கொண்டு இறங்கும்படி சொல்லுவிக்க, அவள் அக்கொம்பரின் பாதிவரைக்கும் இறங்கி இப்பால் இறங்க முடியவில்லை என்றாள்.

—(வரும்.)

### பலாங்கொடைப் பகுதிப் பிரதிநிதித் தெரிவு.

அரசாங்கசபையில் பலாங்கொடைப் பிரதிநிதியாயிருந்த மிஸ்டர் J. C. றத்வத்தை அதிகாரம் அகவினம் காரணமாகத் தம்பதவியினின்றும் நீங்கிவிட Col. T. G. ஜயவர்த்தன, ஸ்ரீ T. வேலுப்பிள்ளை என்னும் இருவர் அபேட்சகராக முற்பட்டு நிற்கின்றனரென்று அறிகிறோம்.

### தொழிற் கட்சியின் வெற்றி.

முன்னர்ப் பாராளுமன்றத்தில் தொழிற் கட்சித் தலைவர்களுள் ஒருவராய் அக்கியநாட்டுமந்திரியாயிருந்து பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தபின்னர் ஆர்தர் ஹெண்டர்சன் அவர்கள் சென்றவாரம் கிளேகுரொஸ் என்னும் இடத்துப்பிரதிநிதியாய்ப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம, பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிச்சுகும் பக்சவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருந்தல் ஒன்றுக்கு ருபா௨0. அரைருத்தலுக்கு ருபா க0. கால்ருத்தலுக்கு ருபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.
க. ஆறுமுகம்பிள்ளை,
சிகுஞான ஆரோக்கியசகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு
இலோன்.

(Y. 27. 31-12-33)



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரா மூலநிதி 8 லட்சம் ருபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ருபா 129777 00.

100 ருபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்ற 1 ருபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ருபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றவரவு.

எச்சமயம் சாரசரி 500 ருபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகபாகமாகக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Q. 78. 21-8-33—20-11-33)



## புறுடென்ஷல் வீமாக் கொம்பனி,

1932-ம் வருஷ ஆதாய நன்கொடை (போனஸ்)

1932-ம் ஆண்டிற்கு முன்பதாகவே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 31/விதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின் பேரில் ரூ. 1000-க்கு ரூ 28/விதம்

1932-ம் ஆண்டிலேயே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 23/= விதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின்பேரில் ரூ. 1000-க்கு ரூ. 20 விதம்.

அசைவற்ற காத்திரமான நிதிகளில் பணங்களை மிக ஜாக்கிரதையுடன் சேமித்துவைத்திருப்பதினாலேயே மேற்கூறிய பெரும் நன்கொடைகளை பணமுட்டு நிறைந்த இக்காலத்திலும் கொடுக்க இயன்றது.

வீமாத் திருவதானால்
புறுடென்ஷலில்
செய்து கொள்ளவும்.

உலகத்தில் மிகக் கூடிய தொகையானவர் சேர்ந்திருக்கும் கொம்பனி. தற்சமயம் 2 கோடி 75 லட்சம் பேர்கள் சேர்ந்திருக்கின்றார்கள்.

350,00,00,000 ருபாவுக்கு மேலானதொகை பொறுப்பானது

நமது இலங்கை அரசிறை வருமானத் தொகையைப் போல் ஏறக்குறைய 8மடங்கு வருமானமுடைய மிகப்பெரிய கொம்பனி. நிமிஷமொன்றிற்கு ரூ. 3000/ மேலான வருமானமுள்ளது.

வேண்டிய விபரங்கள் கீழ்க்காணப்படுபவர்களிடத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. சொர்ணலிங்கம்,
வடஇலங்கை மேற்பார்வைக் காறன், மானிப்பாய்.

Delmege Forsyth & Co. Ltd. Agents,
The Prudential Assurance Co. Ltd. Colombo

(Y. 36. 19 to 31-12-33.)



# விளம்பரம்.

ஜவுளிவகையில்

## எல்லாவிதமான துணிகளும்

பெரியகடை, காங்கேயன்துறைத்

தெருவிலுள்ள எமது

## சில்லறைவிற்பனைக் கடையில்

தாங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா ஜவுளிகளும்,

## இலங்கையிற் செய்யப்பட்டன

என்பதற்கு உத்தரவாதம்.

மற்றைய விடங்களிலும் பார்க்க எமது ஜவுளிகள்

## குணத்தாற் சிறந்தன

## விலையாற் குறைந்தன.

இன்னும், ஒருமுறை வந்து பார்ப்பின்

இதனுண்மை நன்கு புலப்படும்.

## இலங்கை நெசவுத்தொழிற்சாலை

லிமிட்டெட்.

20.)



காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

## மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்ன்மென்ட், முனிசிப்பல்

கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்.

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள தங்கமெடல் ஓடுகள் (Secrtariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கபெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:—64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

க. செ. த. செ. செல்லையாபிள்ளை.-316-ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

W. B. S. தர்மசூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்றாய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.

Y. 2. 31-3-34.)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: W. s Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press the Saiva Prakasa Press. Vannarponnai, Jaffna.